அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

மார்ச் - 2025 | மரம் - 4 | கன்று - 3 | ஆண்டு சந்தா ரூ. 250/- | தனிப்பிரதி ரூ. 25/- | ஆயுள் சந்தா ரூ. 2500/-



## பிள்ளைகளின் மேன்மை அவர்கள் பிதாக்களே.

நீதிமொழிகள் 17:6

ஆசிரியர்: J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# மனம் விட்டு உங்களுடன்...

கிறிஸ்துவுக்குள் எனதன்பு **ஒலிவமரக் கன்றுகள்** இதழின் முதன்மை வாசர்களான குட்டீஸ்களே! இவ்விதழின் கதைகளைப் படித்து இளையோருக்கு சுவைபட எடுத்துச் சொல்லும் பாட்டி தாத்தாமார்களே! உங்கள் அனைவரையும் இந்த சிறார் இதழின் வழியாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இயேசுவின் பிறப்பு நமக்குச் சொல்லித் தருகின்ற முக்கியமான பாடங்களிலிருந்து சில 'கோல்டன் ரூல்களை' தனிப்பட்ட முறையில் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

1. ''மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்'' (வாசிக்க: மத்தேயு 7:12) என்றார் இயேசு.

தன்னைப் போல பிறரை நேசிப்பதில் இருக்கிறது வாழ்வின் மகத்துவம். வாழ்க்கை என்பது பூமராங் போல! எதை எறிகிறோமோ அதுவே நம்மைத் திரும்ப வந்தடையும். அன்பை வீசக் கற்றுக் கொள்வோம், அப்போது அன்பு நம்மை நோக்கி திரும்ப வரும் ''மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்'' (வாசிக்க: மத்தேயு 6:14) என்றார் இயேசு. உண்மைதானே!

2. மன்னிப்பின் சாரலாக நாம் பிற மனிதர்களுடைய குற்றங்களை நிபந்தனைகளின்றி மன்னிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். மன்னிப்பை விதைக்கக் கற்றுக்கொள்வோம், அப்போது உறவின் பூக்கள் மலர்ந்து வரும்.

''நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் (வாசிக்க: மத்தேயு 7 :18,19).

நமது வாழ்க்கை கனிகொடுக்கும் வாழ்க்கையாய் இருக்க வேண்டும் என்பதே இயேசுவின் எதிர்பார்ப்பு. நமது வாழ்க்கையையும் கனிகொடுக்கும் வாழ்க்கையாய்க் கட்டியெழுப்புவோம், அதற்காய் நமது செயல்களைச் செப்பனிடுவோம்.

3. ''நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக (வாசிக்க: ரோமர் 6 :12).

சாத்தான் சோதனைகளை அவர் முன்னால் அடுக்கடுக்காய் நீட்டிய போதும் அவர் சலனப்படாமல் பாவத்தை நிராகரித்து வாழ்கின்ற வாழ்க்கையை இயேசு வாழ்ந்து காட்டினார். பாவத்தை நிராகரிப்பதில் நாகரீகம் பார்க்கத் தேவையில்லை. கர்த்தரை பிரியப்படுத்தி வாழுங்கள். நான் சொன்னவைகளை மறந்துவிட வேண்டாம். மார்ச் மாதம் உங்களை வெற்றி நடை போட வைப்பதாக. உங்களுக்காக ஜெபிக்கிறேன்.



அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# சூரைச்செடி



இம்மாதக் கட்டுரைக்கான திறவுகோல் வசனம்:

> எலியா வனாந்தரத்தில் ஒருநாள் தூர பிரயாணமாய்ப் போய், ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து... போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி, ஒரு சூரைச்செடியின்கீழ்ப் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணினான் (1 இராஜாக்கள் 19:4-5).

வேதாகமத்தில் மூன்று இடங்களில் நாம் (1இராஜாக்கள் 19:4,5; சங்கீதம் 120:4) சூரைச்செடி குறித்த குறிப்புகளைக் காணலாம். சூரைச்செடி குறித்து விவரிக்கிறது இம்மாத தலையங்கம்.

**சூரைச்செடி** என்பது முட்களைக் கொண்ட ஒருவகை வறண்ட காடுகளில் காணப்படும். இவை புதர் போன்ற 15 அடி வரை உயர்ந்து வளரும் குறுமரங்களாகும். சூரைச்செடியின் தாவரவியல் பெயர் Ziziphus oenoplia. Rhamnaceae குடும்பத்தைச் சேர்ந்தது என்கின்றனர் தாவரவியல் அறிஞர்கள். சங்ககாலத்தில் பெண்கள் சூரைச்செடியின் மலர்களை பறித்து அவற்றை குவியலாக கொட்டி விளையாடியதாக இலக்கியக் குறிப்புகள் வழியாக நாம் அறிகிறோம். இச்செடி இந்தியா, சீனா, தென்கிழக்கு ஆசியா, ஆஸ்திரேலியா ஆகிய மிதவெப்ப நாடுகளிலுள்ள வெப்பமண்டல காடுகளைக் கொண்ட சமவெளிகளிலும், மலைச்சரிவுகளிலும், குறிப்பாக வறண்ட நிலங்களிலும், மழை பொழியாத இடத்திலும்கூட இவை நன்றாக வளருமென்பதால் வேலியோரங்களிலும் அடர்ந்து காணப்படுகிறது.

இந்த சூரைச்செடியின் வேறு பெயர்கள் சூரச்செடி, சூரன், சூரைப்புதர் ஆகும். இது சிறு கிளைகளை கொண்டு வளரக்கூடியது. அளவில் சிறிய பூக்களைக் கொண்டுள்ள இச்செடிகள் ஆண்டுக்கொருமுறை பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை பட்டாணி அளவில், பார்ப்பதற்கு நாவல் பழம் போல் கருநீல நிறத்தில் இருக்கும் சூரக் காய்களும் பழங்களும் கிளையோடு கொத்துக் கொத்தாய்க் கொண்டிருக்கும். இதன் கனிகள் புளிப்பும் இனிப்பும் ஒருங்கே புதுச்சுவை கொண்டதாக இருக்கும் இப்பழங்களை சூரப்பழம், சொரட்ட பழம், புளிச்ச பழம் என்றும் வட்டார வழக்கில் அழைக்கிறார்கள்.

வாழையைப் போலவே மருத்துவ குணங்களை கொண்ட சூரைச்செடியின் வேர், இலை, காய், பழம், தண்டு என தாவரத்தின் அனைத்து பாகங்களும் ஆயுர்வேத மருத்துவத்தில் மருந்தாக பயன்படுத்தப்படுகிறது. மேலும், இந்த செடி வலி நிவாரணியாகவும் உள்ளது. இந்த பழத்தில் கால்சியம் அதிகளவில் உள்ளதால் இது எலும்புகளுக்கு வலிமை சேர்க்கிறது. மேலும், கார்போஹைட்ரேட், கால்சியம், இரும்பு, கொழுப்பு, மெக்னீசியம், மாங்கனிஸ், பாஸ்பரஸ், பொட்டாசியம், சோடியம், துத்தநாகம், புரதம், விட்டமின் சி, விட்டமின் ஏ, பி1, பி2, பி3, பி6 ஆகிய சத்துக்களும் உள்ளன. இதில்

நீர்ச் சத்து அதிகமாக உள்ளதால் வறண்ட நிலங்களில் வாழும் உயிரினங்கள் தனது தாகத்தைத் தணிக்க இப்பழங்களை உணவாகக் கொள்கின்றன.

குடற்புண், கருப்பை அழற்சி, பற் சிதைவு, மாந்தம், வயிறு உப்புசம், கப நோய்களை குணமாக்கும் மருந்தாக இப்பழங்களின் சாறு பயன்படுத்தப்படுகிறது. இந்த செடியிலிருந்து பிழிந்து எடுக்கப்படும் ஜிசிபைன் எனும் பட்டைச்சாறு மலேரியா நோய்க்கு எதிரான ஆன்டிபிளாஸ்மோடியல் இன் விட்ரோ என்னும் செயல்பாட்டை ஊக்குவித்து பிணியிலிருந்து விடுதலைக் கொடுக்கிறது.

இந்த செடியின் இலை, தண்டு, பட்டை, பழங்கள் என அனைத்தும் அல்சர் நோய், ஆஸ்துமாவை குணப்படுத்துகிறது. மேலும் இந்த செடி தோல் அழற்சிக்கு சிறந்த மருந்தாக பயன்படுகிறது. இதன் இலையை அரைத்து அடிபட்ட காயங்களில் அரைத்துக் கட்டினால் புண் குணமாகும். இதன் பட்டையை 50 கிராம் எடுத்து 2 லிட்டர் தண்ணீரில் தட்டிப் போட்டு அரை லிட்டராக வற்றக் காய்ச்சி, கசாயம் காய்ச்ச வேண்டும். இதிலிருந்து 100 மில்லி காலையில் குடித்து வந்தால் வயிற்றுப்போக்கு, கருப்பை வீக்கம் குணமாகும். இதே கசாயத்துடன் கொஞ்சம் கடுக்காய் தூள் சேர்த்து கலக்கி வாய் கொப்பளித்தால் ஆட்டங்கண்ட பற்கள் உறுதித்தன்மைப் பெறுவதுடன், வாய் துர்நாற்றம் நீங்கும். மேலும், வாய்ப்புண், வாய்ப்பகுதியில் தோன்றும் ஒவ்வாமை, தொண்டைப்புண்களுக்கு சரியான தீர்வைத் தருகிறது. நீரிழிவு கோளாறுகள் மட்டுப்படும்.

இதன் பழங்களை சாப்பிடுவதால் நமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகிறது. வயிற்றிலுள்ள புண்களை குணப்படுத்துவதற்காக கிராமப்பகுதிகளில் பாட்டி வைத்தியமாக இப்பழங்களை முதியோர்கள் பரிந்துரைக்கின்றனர். சூரைப்பழத்தை மருத்துவ ஆலோசனைப்படி எடுத்துக்கொள்ள பக்க விளைவுகள் இன்றி நன்மை பயக்கும். சூரைச்செடியின் இலை தழைகளை ஆடுகள் விரும்பி உண்ணுவதால் அவ்வாட்டின் இறைச்சியும் ருசியாக இருக்கும் என்று நாட்டுப்புறத்தில் பேசிக்கொள்வது கண்கூடு.

தேவன் நல்லது என்று கண்டார். ஆம், தேவன் படைத்ததெல்லாம் நன்றாகவே இருக்கிறது. படைத்தவரின் பார்வையில் நாம் எவ்வாறு இருக்கிறோம் என்பதே இக்கட்டுரையின் செம்பொருள் கேள்வி.

மரம் நடும் பழக்கம் உங்களுக்கு உண்டா? இதுவரை எத்தனை மரக்கன்றுகள் நட்டுள்ளீர்கள்? அதில் எத்தனை உயிருடன் உள்ளது? மரம் நடும் பழக்கத்தை யாரிடமிருந்து கற்றீர்கள்? என்பதைக் குறித்து ஒரு பக்க கட்டுரை வரைக.









# உலகின் முதல் சகோதரர்கள்

**ஆதியாகமம் 4ஆம் அதிகாரத்தைப் படித்து கேள்விகளுக்கு விடையளியுங்கள்.**

1. ஆதாம் – ஏவாள் பெற்றெடுத்த முதல் குழந்தையின் பெயர் என்ன?
2. காயீனுடைய சகோதரனின் பெயர் என்ன?
3. ஆபேல் என்ன தொழில் செய்தான்?
4. காயீன் என்ன தொழில் செய்தான்?
5. காயீன் கர்த்தருக்கு என்ன காணிக்கை கொண்டு வந்தான்?
6. ஆபேல் கர்த்தருக்கு என்ன காணிக்கை கொண்டு வந்தான்?
7. நீ நிலத்தைப் பயிரிடும்போது, அது தன் பலனை இனி உனக்குக் கொடாது என்று கர்த்தர் யாரை சபித்தார்?
8. கர்த்தர் யாருடைய காணிக்கையை அங்கிகரித்தார்?
9. யாருக்கு எரிச்சல் உண்டாகி, முகநாடி வேறுபட்டது?
10. என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்று கர்த்தரிடம் கூறியது யார்?

விடைகள் 8ஆம் பக்கம் பார்க்கவும்

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

ஆதிமனிதன் ஆதாமும், அவனுடைய துணைவியான ஏவாளும் தேவனின் கட்டளையை மீறியதால் தேவனுடைய தோட்டமான ஏதேனை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். ஏதேனை விட்டு வெளியேறிய ஆதாமும் ஏவாளும் தனியே வாழ்க்கையை ஆரம்பித்தார்கள்.


காலம் உருண்டோடியது. ஏவாள் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். ஆதாம் அவனுக்குக் காயீன் என்று பெயரிட்டார். சில ஆண்டுகளில் அவர்களுக்கு இன்னொரு மகனும் பிறந்தான். அவனுக்கு ஆபேல் என்று பெயரிட்டார்கள். ஆதாமும், ஏவாளும் தங்கள் பிள்ளைகளை மிகவும் பாசத்துடன் பராமரித்தனர். தங்களுக்குக் குழந்தைகள் பிறந்ததற்கு தேவனின் கிருபை தான் காரணம் என்று மகிழ்ந்தார்கள். ஆதாம் கடுமையாக உழைத்துக் குடும்பத்திற்குத் தேவையான உணவைக் கொண்டு வந்தார்.


காயீனும், ஆபேலும் வளரத் துவங்கினார்கள். ஆதாமும் ஏவாளும் குழந்தைகளின் வளர்ச்சியைப் பிரமிப்புடன் பார்த்தார்கள். உலகின் முதல் தந்தையான ஆதாமுக்கும், முதல் தாயான ஏவாளுக்கும் எல்லாமே புதுமையானதாகவும், முதல் அனுபவமாகவும் இருந்தன. மகன்கள் இருவரும் வளர்ந்து இளைஞர்கள் ஆனார்கள்.

தேவன் படைத்த விலங்குகளில் ஆட்டின் மாமிசம் சுவையானதாக இருப்பதை ஆதாம் அறிந்து கொண்டார். எனவே அவன் ஒரு ஆட்டுமந்தையை உருவாக்கி அதை மேய்க்கும் பொறுப்பை ஆபேலிடம் ஒப்படைத்தார். ஆபேல் தினமும் ஆட்டுமந்தைகளைக் கண்காணித்து வந்தான். அவை கூட்டத்தை விட்டு விலகிச் சென்று விடாமலும், வேறு விலங்குகள் எதுவும் வந்து மந்தையைச் சிதறடித்துவிடாமலும் பாதுகாத்துவந்தான்.

காயீன் தோட்டவேலை செய்தான். நிலத்தை பக்குவப்படுத்தி அங்கே கனிதரும் தாவரங்களை நட்டு அவற்றைப் பராமரித்துவந்தான். தோட்ட வேலையைப் பற்றியோ, மந்தை மேய்ப்பதைப் பற்றியோ அவர்களுக்கு ஏதும் முன் அனுபவங்களோ, முன் உதாரணங்களோ இருக்கவில்லை. எனவே அவர்கள் மிகவும் வருந்தி உழைத்து தங்கள் அன்றாட வாழ்வைக் கழித்து வந்தார்கள்.

சிலநாட்கள் சென்றபின் காயீனும் ஆபேலும் தங்கள் உழைப்பின் பயனை தேவனுக்கு அளிப்பதற்காக பலிபீடத்தின் முன் வந்தார்கள். காயீன் நிலத்தின் கனிகளை காணிக்கைக்காகக் கொண்டு வந்தான். ஆபேல் தனது மந்தையிலிருந்த கொழுத்த தலையீற்றுகளைக் கொண்டு வந்தான். தேவன் ஆபேலின் காணிக்கையை ஏற்றுக்கொண்டு, காயீனின் காணிக்கையைப் புறக்கணித்தார். காயீன் ஆபேலின் மீது கோபம் கொண்டான். தன்னுடைய பலி ஏற்றுக்கொள்ளப்படாமல் அவனுடைய பலி மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டதே என்று உள்ளுக்குள் ஆவேசமடைந்தான்.





‘காயீன்... காயீன்...’ தேவன் காயீனை அழைத்தார்.

‘யார் என்னை அழைப்பது?’ காயீன் கேட்டான்.

‘நான் தான்.. உன் தேவன். உன்னுடைய முகத்தில் கோபமும், வாட்டமும் இருப்பதைக் கண்டதால் உன்னை அழைக்கிறேன்’ தேவன் சொன்னார்.

‘கோபமா? நான் ஏன் கோபப்படவேண்டும்? அல்லது நான் ஏன் வருத்தமடைய வேண்டும்?’ காயீன் கேட்டான்.

‘காயீனே... பாவம் செய்வதற்கு உன்னைத் தூண்டும் எண்ணங்களெல்லாம் உன் வாசலில் வந்து படுத்திருக்கும். ஆனால் நீ அவற்றினுள் விழுபவனாக இருக்கக்கூடாது. அதையெல்லாம் வெற்றி கொள்பவனாக இருக்க வேண்டும்’ தேவன் சொன்னார்.

காயீன் பதில் சொல்லவில்லை. அவன் மனம் தேவனின் வார்த்தைகளில் சமாதானமடையவில்லை. அவனுடைய கோபமெல்லாம் ஆபேலின் மீதே இருந்தது. ‘மூத்தவன் நான் இருக்கும்போது இளையவன் உன்னுடைய பலிகள் மட்டும் அங்கீகரிக்கப்படுகிறதா? அது எனக்கு அவமானமல்லவா?’ என்று அவனுக்குள் வெறுப்பு எண்ணம் வளர்ந்து கொண்டே இருந்தது. அவனுக்குள் இருந்த வெறுப்பு எண்ணம் கொலைவெறியாக மாறியபோது அவன் வந்து ஆபேலை அழைத்தான்.

‘ஆபேல்...’

‘சொல்லுங்கள் அண்ணா...’ ஆபேல் எழுந்தான்.



‘வா... என்னுடைய வயல்வெளிக்கு வா... என்னுடைய விளைநிலங்களையெல்லாம் நீ பார்க்க வேண்டாமா’ காயீன் அழைத்தான்.

‘இதோ வருகிறேன் அண்ணா...’ ஆபேல் உற்சாகமாய் எழுந்தான்.

அவர்கள் இருவருமாக வயல்வெளியை நோக்கிச் சென்றார்கள். வழியில் ஆபேல் காயீனிடம், ‘உன்னுடைய பலிகளைக் தேவன் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கவலைப்படாதே. அடுத்தமுறை தேவனுக்குப் பலியிடும் போது மிகச் சிறப்பானவற்றைக் கொண்டு வா. கண்டிப்பாக உன்னுடைய பலியை தேவன் ஏற்றுக்கொள்வார்’ என்றான். அதைக் கேட்டதும் காயீனின் கோபம் பலமடங்கு அதிகரித்தது.

‘நீ எனக்கு அறிவுரை சொல்லும் அளவுக்கு வளர்ந்து விட்டாயா?’ என்று கேட்டுக் கொண்டே அவன் மீது பாய்ந்து அவனைக் கீழே தள்ளினான். ஆபேல் நிலைகுலைந்து விழுந்தான். தன் மீது தன் சகோதரன் முதன்முதலாக நடத்தும் தாக்குதலை அவன் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. கீழே விழுந்த ஆபேல் எழுந்திருக்கும் முன் காயீன் அவனை அடித்துக் கொன்றான். ஆபேலின் குற்றமற்ற இரத்தம் மண்ணின் மீது பாய்ந்தோடியது. பொறாமையினால் முதல் கொலை அங்கே அரங்கேறியது.

காயீன் நடுங்கினான். ‘ஆபேல்.. ஆபேல்...’ என்று காயீன் சற்று நேரம் அழைத்துப் பார்த்தான். பதில் வராததால் ஓடிப் போய் மலைகளிடையே ஒளிந்து கொண்டான்.

ஆண்டவர் காயீனை அழைத்தார். காயீன் மேலும் அதிகமாக நடுங்கினான்.

‘‘காயீனே... நீ எங்கே இருக்கிறாய்? எங்கே உன் சகோதரன் ஆபேல்?’’

‘‘ஆபேலா? அவன் எங்கே இருக்கிறான் என்று எனக்குத் தெரியாது. அவனுக்கு நான் என்ன காவலாளியா? அவன் அவனுடைய மந்தையை மேய்த்துக்கொண்டிருப்பான் என்று நினைக்கிறேன்’ காயீன் உலகின் முதல் பொய்யைச் சொன்னான்.

‘‘காயீனே. நீ தேவனிடம் பேசுகிறாய் என்பதை நினைவில் கொள். நீ ஆபேலை என்ன செய்தாய்? அவனுடைய இரத்தம் என்னை நோக்கிக் கூக்குரல் இடுகிறதே’’ தேவன் சொன்னார். காயீன் பயத்திலும், பதட்டத்திலும் அமைதியானான்.

‘காயீனே... உன் சகோதரன் ஆபேலைக் கொன்று விட்டாயே! அவனுடைய இரத்தத்தை இந்த மண்ணிலே சிந்திவிட்டாயே. அவனுடைய குற்றமற்ற இரத்தத்தை நீ இந்த மண்ணில் சிந்த வைத்ததனால் உன்னை சபிக்கிறேன். இனிமேல் நீ என்ன பயிரிட்டாலும் அது உனக்குக் பலன் தராது. நீ நாடோடி போல அலைந்து திரிவாய்’ தேவன் சபித்தார்.

‘தேவனே... என்னைக் கைவிடாதேயும். என்னை மன்னித்தருளும்...’ காயீன் கதறினான். மேலும் அந்த இடத்திலே நிற்க பயந்துபோய் வேறு திசையில் ஓடினான்.

ஒற்றுமையாய் ஒரு இடத்தில் இருந்த ஆபேலின் குடும்பம் சிதறியது. இதுவே உலகில் நடந்த முதல் மனித கொலை.

பொறாமை சாத்தானின் குணம். அதை உள்ளத்தில் வளரவிடக்கூடாது என்பதையே காயின் ஆபேல் கதை நமக்குப் பாடமாக உணர்த்துகிறது.

தொடரும்...

5ஆம் பக்கத்தின் விடைகள்

## உலகின் முதல் சகோதரர்கள் - பதில்கள்

1. காயீன், 2. ஆபேல், 3. ஆடுகளை மேய்த்தல், 4. நிலத்தைப் பயிரிடுதல், 5. நிலத்தின் கனிகளை, 6. மந்தையின் தலையீற்றுகளை, 7. காயீனை, 8. ஆபேலின் காணிக்கையை, 9. காயீனுக்கு, 10. காயீன்

# “காயீன் மற்றும் ஆபேல்” தொடர்புடைய சொற்களை கண்டு வட்டமிடுக. (வாசிக்க: ஆதி. 4ஆம் அதிகாரம்)

காணிக்கை
சகோதரன்
காயீன்
ஆடு
நிலம்
பயிர்
எரிச்சல்
ஆபேல்



முகநாடி
பாவம்
வயல்வெளி
இரத்தம்
பூமி
பலன்
தண்டனை
காவலாளி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ன் | பூ | மி | ல | ச | கோ | த | ர | ன் | கை |
| பா | மு | க | நா | டி | ப | நி | ல | ம் | யீ |
| வ | நி | வ | கோ | இ | ர | த் | த | ம் | ல் |
| ம் | ப | ய | ரி | கா | ணி | த | ண் | ட | னை |
| இ | யி | ல் | கா | ணி | ஆ | டு | எ | கா | ப |
| ண் | ர் | வெ | மு | க் | பூ | ளி | ரி | கா | ல |
| த் | னை | ளி | த | கை | பே | நா | ச் | யீ | ன் |
| ன் | கா | வ | லா | ளி | ல் | மி | ச | ன் | பா |
| எ | ச | ஆ | ஆ | பே | ல் | லா | ல் | ப | த |

# தேனீ!



காட்டுப் பகுதியில் களைப்போடு சென்றுகொண்டிருந்த ஓர் இஸ்ரவேல் படைவீரன், ஒழுகிக்கொண்டிருந்த ஒரு தேன்கூட்டை எதேச்சையாக பார்க்க, அதைத் தன் கோலினால் குத்தி கொஞ்சம் தேனை எடுத்துச் சாப்பிட்டான். உடனே 'அவன் கண்கள் தெளிந்தது,' களைப்பெல்லாம் பஞ்சாய்ப் பறந்துபோனது (1 சாமுவேல் 14:25-30). தேனை உபயோகிப்பதால் மனிதனுக்குக் கிடைக்கும் பல நன்மைகளில் ஒன்றை இந்த பைபிள் பதிவு எடுத்துக்காட்டுகிறது. இந்த மாதம் தேனீயைக் குறித்து பார்க்கலாம்.

**தேனீ** (Honey Bee) ஆறுகால்கள் (Hexapoda) கொண்ட பறக்கும் சிறு பூச்சி இனத்தில் ஒன்றாகும். அறிவியலில் தேனீக்கள் Apidae என்னும் குடும்பத்தில், Apis என்னும் பேரினத்தைச் சேர்ந்தவை. இவை ஈ பேரினத்தில் ஒரு வகை ஆகும். ஈ பேரினத்தில் இன்று ஏறத்தாழ 20,000 வகைகள் அறியப்பட்டுள்ளன. அவற்றுள் ஏழு இனங்கள்தான் தேனீக்கள் ஆகும். இந்தத் தேனீக்களில் மொத்தம் 44 உள்ளினங்கள் உள்ளன. தமிழகத்தில் வணிக ரீதியாக வளர்க்கப்படும் அடுக்குத் தேனீ இனம் இந்தியத் தேனீ இனமாகும்.

தேனீக்கள் பெரும்பாலும் கிழக்கு ஆசியாவில் இருந்து தோன்றியதாக அறிவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். மாந்தர்கள் கி.மு 4000 ஆண்டுகளிலேயே தேனீக்கள் வளர்த்து தேன் உற்பத்தி செய்தார்கள் என்று பல்வேறு கணிப்புகள் உள்ளன.

தேனீக்கள், சுறுசுறுப்பு, கூட்டு முயற்சி மற்றும் தலைமைக்குக் கட்டுப்படுதல் போன்ற சமூகப் பண்புகள் மிக்கவை. ''தேனீக்கள் இல்லையெனில்... உலகின் 80 சதவிகித மலர்களுக்கு மகரந்த சேர்க்கை இல்லை. மகரந்த சேர்க்கை இல்லையெனில் தாவரங்கள் தழைக்க வழியில்லை. தாவரங்கள் இல்லையெனில் மிருகங்கள் வாழ வழியில்லை. மலர்கள், தாவரங்கள் மற்றும் மிருகங்கள் இல்லையெனில் மனிதனுக்கும் பூமி பந்தில் உயிர் வாழ வழியில்லை,'' என்றார் விஞ்ஞானி ஆல்பிரட் ஐன்ஸ்டீன்.

தேனீக்கள் மனிதனுக்காக மட்டும்தான் தேனைத் தயாரிக்கின்றனவா? இல்லை, அதை தனக்காக தயாரிக்கின்றன, அவற்றின் உணவே தேன்தான். சராசரி அளவு தேன்கூட்டிலுள்ள தேனீக்களுக்குக் குளிர்காலத்தின்போது 10 முதல் 15 கிலோ தேன் தேவைப்படுகிறது. ஆனால் சாதகமான காலத்தின்போது 25 கிலோ தேனை தயாரிக்க முடிகிறது. இதனால் மீதமுள்ள தேனை மனிதர்களால் சேகரித்து, ருசிக்க முடிகிறது. அதுமட்டுமல்ல, கரடிகள், ராக்கூன் கரடிகள் போன்ற மிருகங்களாலும் ருசிக்க முடிகிறது.



தேனில் சுமார் 82 சதவீதம் மாவுச்சத்து இருப்பதால் இது உடலுக்கு உடனடி சக்தியைத் தருகிறது. வெறும் 30 கிராம்

தேனிலிருந்து கிடைக்கும் சக்தியைக் கொண்டு ஒரு தேனீயால் உலகத்தையே சுற்றி வர முடியும் என்று சொல்லப்படுகிறது! தேனீக்கள் ஏறக்குறைய ஒரு லட்சம் கிலோ மீட்டர் வரை பயணிக்கும் திறனைக் கொண்டதாகும்.

தேனீ ஒரு அதிசயப்பிறவி. ஒரு தேன் கூட்டில், ஒரே ஒரு ராணித்தேனீ, சுமார் 100 ஆண் தேனீக்கள் மற்றும் ஆயிரக்கணக்கான முட்டையிடாத பெண் பணித்தேனீக்கள் மட்டுமே இருக்கும். ராணித்தேனீ நல்ல சத்தான உணவை தினம் உண்டு, நாள் ஒன்றுக்கு 1,500 முதல் 3,000 முட்டைகளை இடும். வருடத்திற்கு இரண்டு லட்சம் முட்டை வரையிலும் இடக்கூடிய திறன் பெற்றதாகும். இதன் ஆயுட்காலம் மூன்று முதல் ஐந்து ஆண்டுகள். ஆண் தேனீக்கள் எந்த வேலையையும் செய்யாமல் உண்டு வளரும்.

பிறந்த 24 நாட்கள் முதல் சாகும் வரை தேனீக்களின் பணி தேன் சேகரித்தல் மட்டுமே. இவற்றிலும் சாரணியர் பிரிவு ஒன்று உண்டு. பூக்கும் காலங்களில் முதலில் பறந்து சென்று மலர்கள் இருக்கும் இடத்தை அறிந்து வந்து, தங்களது நேர்த்தியான நடனத்தால் மலர்கள் இருக்கும் திசையையும், தூரத்தையும் மற்ற தேனீக்களுக்கு தெரிவிக்கும். ஒவ்வொரு தேனீயும் அதிகாலையில் எழுந்து மூன்று முதல் ஐந்து கி.மீ., தூரம் வரை சுற்றிப் பறந்து, மலர்களை கண்டறிந்து, மலர்கள் கொஞ்சம் கூட நோகாமல் அதன் அமிழ்தத்தை உறிஞ்சிக் குடித்து, தன் உடலில் இருக்கும் தேன் பையில் சேகரிக்கும்.



அதேநேரம் மலர்களின் மகரந்தத்தை தன் உடலில் சுமந்தும் வரும். மலருக்கு மலர் தாவும் பொழுது, தனது உடலில் ஒட்டியுள்ள மகரந்தத்தை சற்று சிதறி மகரந்த சேர்க்கையையும் உருவாக்கும். தான் உண்ட அமிழ்தத்தை கொஞ்சம் மட்டும் தனக்காக செரிமானம் செய்து விட்டு, மீதமுள்ளதை தன் வயிற்றில் இருக்கும் நொதிகளுடன் சேர்த்து திரவமாக மாற்றி விடுகிறது. தேனீக்கள் தங்களுடைய உடலில் உள்ள விசேஷ சுரப்பிகள் சுரக்கக்கூடிய ஒரு வகையான மெழுகினைக் கொண்டே இந்தத் தேன்கூடுகளை அமைக்கின்றன. பிறகு தேன்மெழுகால் செய்யப்பட்ட அறுகோண வடிவ சிற்றறைகளில் அந்தத் தேனை வைத்து, தங்கள் இறக்கைகளை விசிறி போல ஆட்டி தேனிலுள்ள ஈரப்பதத்தைக் குறைக்கின்றன. அதன் ஈரப்பதம் 18 சதவீதத்திற்கும் குறைவாக ஆன பிறகு இந்தச் சிற்றறைகளை மெல்லிய மெழுகால் மூடுகின்றன. இவ்வாறாக ஒரு நாளைக்கு பத்து முறையாகினும் தன் பயணத்தை மேற்கொள்ளும்.

தன் வாழ்நாளில் ஒரு தேனீ பயணிக்கும் தூரம், இவ்வுலகத்தை நான்கு முறை சுற்றுவதற்கு சமம். ஒரு சிறு கரண்டி அளவு தேனை சேகரிக்க 12 தேனீக்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் உழைக்க வேண்டும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட தேன் எத்தனை வருடங்களானாலும் கெட்டுப்போகாமல் அப்படியே இருக்கிறது.

ஒவ்வொரு கூட்டிலும் வெவ்வேறு வளர்ச்சி நிலைகள் உள்ளன. அவை முட்டை, புழுக்கள், கூட்டுப்புழு மற்றும் வளர்ந்த தேனீ ஆகிய நான்கு நிலைகள் ஆகும். தேன் கூட்டின் அறைச்சுவற்றின் தடிமன் ஒரு அங்குலத்தில் ஆயிரத்தில் இரண்டு பகுதி உடையதாயிருக்கும். இவை இந்த அளவிற்கு மெல்லியதாக இருப்பினும் அவை அதன் எடையைக் காட்டிலும் 25 மடங்கு எடையைக் தாங்கக் கூடிய திறன் உடையதாயிருக்கும். இவற்றின் கூடு முழுதும் இத்தகைய துளை அறைகளைக் கொண்டதாயிருக்கும். நாட்கள் கூடக் கூட இவற்றின் கூட்டின் அளவும் பெரியதாகிக் கொண்டே செல்கின்றது. உண்மையில் தேன்கூடு பொறியியல் ரீதியில் ஓர் அதிசயமே!

கூட்டின் வெப்ப நிலையைக் குறைக்கவும் தேவையின் போது குளிர் காலங்களில் கூட்டில் வெப்ப நிலையை ஏற்படுத்துவதும், எதிரிகள் தங்கள் கூட்டைத் தாக்க வரும்போது தங்கள் கொடுக்கினால் எதிரியைக் கொட்டிப் பாதுகாக்கவும் செய்கின்றன. இவை ஒரு முறை எதிரியைக் கொட்டியவுடன் இறந்து விடுகின்றன. இவற்றின் கொடுக்கு அதனுடைய விசப் பையுடன் இணைந்து இருப்பதனால் கொட்டும் போது அதன் கொடுக்கு எதிரியின் உடலில் குத்தப்பட்டு அங்கேயே தங்கிவிடுவதனால் அவற்றுடன் இணைக்கப்பட்ட விசப் பையின் வாய் சிதைந்து விசம் எதிரியின் உடலில் பரவி, உயிரிழக்கக் காரணமாக அமைந்து விடுகின்றது. தங்கள் கூட்டைக் காக்கும் போராட்டத்தில் இவை உயிரைத் தியாகம் செய்கின்றன.

ஒரு நல்ல ஆரோக்கியமான கூட்டில் 80 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் தேனீக்கள் வரை இருக்கும். இத்தகைய பிரம்மாண்டமான எண்ணிக்கையில் இருப்பினும் கூட இவற்றிற்கிடையே எந்த விதமான நிர்வாகக் கோளாறுகளோ அல்லது குளறுபடிகளோ வருவதில்லை. ஒரு நல்ல கூட்டின் சுற்றளவு 3 மீட்டர் வரை கூட இருக்கும்.

தேன் அருமையான சத்துணவாக இருப்பதோடு, விட்டமின் ‘பி’, கனிமங்கள், மேலும் ஆண்டிஆக்ஸிடன்டுகளின் களஞ்சியமாக இருப்பதோடு, அன்றிலிருந்து இன்றுவரை உபயோகப்படுத்தப்படும் பிரசித்திப்பெற்ற மருந்துகளில் ஒன்றாகவும் இருந்து வருகிறது. காயம், தீப்புண், கண் புரை, தோல் புண், வடு போன்ற பலதரப்பட்ட உடல்நலப் பிரச்சினைகளுக்குப் பல நூற்றாண்டுகளாகத் தேன் அருமருந்தாக இருந்து வருகிறது.

தேனமுது, தேனீயின் வாயிலுள்ள ஓர் என்ஸைமுடன் கலப்பதால்தான் தேனுக்கு ஆண்டிபாக்டீரியல் மற்றும் ஆண்டிபயாட்டிக்கின் தன்மை வருகிறதென்று ஆராய்ச்சிகள் காண்பிக்கின்றன. தேனிலுள்ள இந்த என்ஸைம் ஹைட்ரஜன் பெராக்ஸைடை உற்பத்தி செய்வதால் தீங்கிழைக்கும் பாக்டீரியாக்களைக் கொல்கிறது. இந்த என்ஸைம்கள், சூடு படும்போதும் வெளிச்சம் படும்போதும் அழிந்துவிடுவதால், பதப்படுத்தப்படாத சுத்தத் தேன்தான் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. அதுமட்டுமல்ல, தேனை புண்ணின் மீது தடவும்போது, வீக்கம் குறைந்து ஆரோக்கியமான தசைகள் வளருகின்றன. ஆஸ்திரேலியன் தெரப்யூட்டிக் குட்ஸ் அட்மினிஸ்ட்ரேஷன் என்ற அமைப்பு தேனை மருந்தாகப் பயன்படுத்தலாம் என்று அங்கீகரித்துள்ளது. அதனால், அது அந்த நாட்டின் எல்லாக் கடைகளிலும் காயங்களுக்குக் கட்டுப்போடும் மருந்தாகக் கிடைக்கிறது.

தேன் உண்பதால் ஞாபக சக்தி அதிகரிக்கும். ரத்த அழுத்தம் சீராக இருக்கும். கொழுப்பு சத்து குறையும். இருமல் கட்டுப்படும். நல்ல தூக்கம் தரும். பொடுகை அகற்றும். காயங்கள் விரைவில் ஆறும். முக அழகை மேம்படுத்தும்.

இவ்வளவு சத்தும் சுவையும் மருத்துவக் குணங்களும் நிறைந்த வேறெந்த உணவாவது இருக்கிறதா என்ன! அதனால்தான், முன்பெல்லாம் தேனீக்களையும் தேனீ வளர்ப்பவர்களையும் பாதுகாக்க விசேஷ சட்டங்கள் வகுக்கப்பட்டன! தேன் கூட்டையோ தேன்கூடு இருக்கும் மரத்தையோ சேதப்படுத்துபவர்களுக்குப் பெரும் அபராதம் விதிக்கப்பட்டது, சில நேரங்களில் மரண தண்டனைகூட வழங்கப்பட்டது.


காலநிலை மாற்றம், பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு, தேனீக்களின் வாழ்விடங்களில் மாற்றம், விவசாய நிலங்கள் அழிக்கப்படுதல், தேனெடுக்க வருபவர்கள் தேனீக்களை கொல்லுதல் போன்ற காரணங்களால் தேனீக்கள் அழிவைச் சந்திக்கின்றன. எத்தனையோ சிறப்புகள் கொண்ட, எளிதில் செரிமானம் ஆகக்கூடிய இயற்கையான உணவை தரும் தேனீக்களை பாதுகாப்பது நமது கடமை.

**உண்மையில் தேனீ, மனிதனுக்கு கிடைத்த விலைமதிப்புள்ள ஒரு பரிசு, தேவனுக்குக் கனம் சேர்க்கும் ஒரு படைப்பு.**

பூவிலிருந்து எடுத்த தேனை தன் தேன்கூட்டிற்கு சென்று சேர்ப்பதற்கு **தேனீக்கு** சரியான வழிகாட்டுங்கள் குழந்தைகளே.



# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)




என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. (சங்கீதம் 103:2)




கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள். அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே. அவைகளெல்லாம் கடிந்துகொள்ளப்பட்டு வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும்; வெளியரங்கமாக்குகிறதெல்லாம் வெளிச்சமாயிருக்கிறது. (எபேசியர் 5:11-13)

# சிரேனே சீமோன்

தேவாலயத்து ஆசாரியர்கள், பரிசேயர்கள், வேதபாரகர்கள் மற்றும் யூத மத கூட்டத்தின் கூக்குரலான கோரிக்கைக்கு பணிந்து, பிலாத்து மரண தண்டனைக்கு உத்தரவிட்டபோது, கர்த்தராகிய இயேசு அதற்கு இசைவு தெரிவித்து, கொல்கொதா நோக்கி செல்ல ஆரம்பித்தார். மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒரு குற்றவாளி தனக்கான மரச்சிலுவையை எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களின் சொந்த சிலுவையை அவர்களே எடுத்துக்கொள்ள வேண்டும், மரணதண்டனைக்கான உபகரணங்கள் இனிமையானது அல்ல, மேலும் மரண தண்டனை பெற்ற நபரின் ஆவியை உடைக்க அது நடத்தப்பட்டது. கொடூரமான ஊர்வலம் மனிதக் கொடுமையை வெளிப்படுத்துகிறது, அதே போல் நிர்வாகிகள் பொதுமக்களுக்கு எச்சரிப்பதோடு, கருத்து வேறுபாடு அல்லது கலகம் அல்லது சட்டத்தை மீறுபவர்களுக்கும் இதேபோன்ற விதி காத்திருக்கிறது.

ஆட்சியாளன் பிலாத்துவின் வீரர்கள் மற்றும் ஏரோதின் வீரர்களின் கடுமையான அடிகளால் ஆண்டவர் இயேசு சோர்ந்து போயிருந்ததால் அன்றைய ஊர்வலம் மிகவும் இதயத்தை பிளந்தது. மேலும் அவர் உணர்வுபூர்வமாகவும் உடைந்துதான் போயிருப்பார்; ஆம், ஒருவரால் காட்டிக் கொடுக்கப்பட்டார், மற்றொருவரால் மறுதலிக்கப்பட்டார், யோவானைத் தவிர மற்ற சீஷர்களால் கைவிடப்பட்டார், மிகவும் சோர்வடைந்தார். பாவ மனிதகுலத்தின் ஆவிக்குரிய பாரமும் அவரது ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம் மீது ஏறியிருப்பதால் சிலுவை அதிக எடையாயிருக்கும். கர்த்தராகிய இயேசு ‘தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார்’ (யோவான் 19:17). இருப்பினும், அவர் தடுமாறினார், மேலும் அதிக சுமையுடன் நடக்க முடியவில்லை. ரோமானிய வீரர்கள்



தங்கள் கைதி தூக்கிலிடப்படுவதற்கு முன்பு இறப்பதை விரும்பவில்லை, எனவே கர்த்தராகிய இயேசுவுக்கு உதவ ஒருவரைக் கொண்டுவர நினைத்தனர்.

### யாரவர்?

அவர் தான் சிரேனே சீமோன். பஸ்கா மற்றும் பெந்தெகொஸ்தே நாட்களில் பல பக்தியுள்ள யூதர்கள் எருசலேமுக்கு வந்ததைப் போல, சிரேனே சீமோனும் எருசலேமுக்கு வந்திருக்கலாம். இவர் தற்கால ஆப்பிரிக்காவில் உள்ள லிபியாவில் இருந்து எருசலேமுக்கு வந்த பயணிகளில் ஒருவன் என வேதாகம அறிஞர்கள் சொல்கின்றனர். அவர் புலம்பெயர் யூதரா அல்லது ஆப்பிரிக்காவில் இருந்து யூத மதத்திற்கு மாறியவரா என்பது உறுதியாக தெரியவில்லை. மரணத்தை நோக்கிய இயேசுவைச் சூழ்ந்த அந்த ஊர்வலம் எருசலேமின் வாயில்களை விட்டு வெளியேறிய நேரத்தில் சீமோன் ஆப்பிரிக்காவில் இருந்து ஒரு மாதம் பயணம் செய்திருக்க வேண்டும். சில அறிஞர்கள் சீமோன் ஒரு இரகசிய விசுவாசி என்றும், ரோமானிய வீரர்களின் கொடூரமான சட்ட விரோத நடத்தைக்கு எதிர்ப்பு தெரிவித்ததாகவும் கருத்து தெரிவித்துள்ளனர். பழிவாங்கும் விதமாக, சீமோன் சிலுவையை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மற்ற அறிஞர்கள் அவன் ஒரு அந்நியன் என்று நினைக்கிறார்கள், வீரர்கள் அவனைப் பிடித்து சிலுவையைச் சுமக்க வைப்பது சூழலை சாமர்த்தியமாக கையாள நினைத்திருக்கலாம். ஒரு யூதர் சிலுவையை தானாகவே சுமக்க முன்வந்திருக்க மாட்டான். ‘அவர்கள் இயேசுவைக் கொண்டுபோகிறபோது, நாட்டிலிருந்து வருகிற சிரேனே ஊரானாகிய சீமோன் என்கிற ஒருவனைப் பிடித்து, சிலுவையை அவர் பின்னே சுமந்துகொண்டுவரும்படி அதை அவன்மேல் வைத்தார்கள்’ என்று லூக்கா 23:26இல் வாசிக்கிறோம்.

சீஷர்கள் காணாமல் போனார்கள், கர்த்தராகிய இயேசு ஊழியத்தின் மூலம் பயனடைந்தோர் காணாமல் போனார்கள், நல்ல சமாரியர்களைக் காணவில்லை; ஆனால் சீமோன் கிடைத்தார். அவன் சரியான நேரத்தில் சரியான வேலைக்காக இருந்தார். அந்த நேரத்தில் சீமோன் இருந்ததே தேவனின் இறையாண்மை வடிவமைப்பு. பஸ்கா பண்டிக்கைக்கு ஆட்டுக்குட்டியை பலியிட வந்திருக்க வேண்டிய சீமோன், உலகத்தின் பாவத்தை நீக்கும் தேவ ஆட்டுக்குட்டிக்கு உதவ முடிந்தது.

சிலுவையைச் சுமக்கும்படி சீமோன் கட்டாயப்படுத்தப்பட்டார் அல்லது கட்டளையிடப்பட்டார். கர்த்தராகிய இயேசுவின் மீது பொதுமக்களிடையே மிகுந்த விரோதம் இருந்தபோது, பாதிக்கப்பட்டவருக்கு உதவுவது சாதகமான விருப்பமாக இருக்கவில்லை. சீமோன் கர்த்தராகிய இயேசுவை அவருடைய அவமானம், நிந்தை, நிராகரிப்பு, வாய்மொழி மற்றும் வன்முறை துஷ்பிரயோகம் மத்தியில் அடையாளம் காண வேண்டியிருந்தது. சீமோன் தயக்கம் காட்டியிருக்கலாம், ஆனால் ரோமானிய ஆட்சியாளர்களின் கீழ் வேறு வழியில்லை. ஒன்று அவர் கீழ்ப்படிய வேண்டும் அல்லது தப்பி ஓட வேண்டும், மீறினால் கைது செய்யப்படலாம்.

### இவர் வேற மாதிரி ப்ரோ:

‘அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்’ (மத்தேயு 16:24). சிலுவை என்பது மிருகத்தனம், வன்முறை, வேதனை, அவமானம், பாவம் மற்றும் மரணத்தின் சின்னமாகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் கல்வாரி சாலையில் கர்த்தராகிய இயேசுவை அடையாளம் காண வேண்டும்; மாற்று வழி இல்லை. கர்த்தராகிய இயேசுவின் அணிவகுப்பு விரோதமும்

வெறுப்பும் நிறைந்த சூழலில் இருந்தது. கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றுபவர்கள் உலகத்திலிருந்து விரோதத்தையும் வெறுப்பையும் எதிர்பார்க்க வேண்டும், ஏனென்றால் அவர்கள் உலகத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவே (யோவான் 15:18-19).

நற்செய்தி எழுத்தாளர் மாற்கு மேலும் ஒரு தகவலைக் கொடுக்கிறார், சீமோன் என்பவன் அலெக்சாண்டர் மற்றும் ரூப்பின் தந்தை. ‘சிரேனே ஊரானும், அலெக்சந்தருக்கும் ரூப்புக்கும் தகப்பனுமாகிய சீமோன் என்னப்பட்ட ஒருவன் நாட்டிலிருந்து அவ்வழியே வருகையில், அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம்பண்ணினார்கள்’ (மாற்கு 15:21). மாற்குவின் நற்செய்தியைப் படித்தவர்களுக்கு, அலெக்சாண்டர் மற்றும் ரூப்பு ஆகிய இரண்டு முக்கிய மனிதர்கள் நன்கு அறியப்பட்டவர்கள். சீமோன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அந்த நாளில் மட்டும் அல்ல, அவருடைய வாழ்நாள் முழுவதும் பின்பற்றினார். சீமோன் இதைப் பற்றி பெருமையாக பேசியதாக எந்த பதிவும் இல்லை, உண்மையில், சீமோனின் மகன்களை வைத்து வாசிப்பவர்களுக்கு அடையாளம் காட்டினார் மாற்கு. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை தன் பிள்ளைகளும் பின்பற்றுவதை சீமோன் உறுதி செய்தார்.

பவுல் ரூபு பற்றி எழுதுகிறார், அவர் மாற்கு குறிப்பிட்ட அதே ரூபாக கருதப்படுகிறார். சீமோனின் மனைவியும் தேவனின் அற்புதமான பெண் மற்றும் பவுலுக்கு தாயைப் போல இருந்தார். ‘கர்த்தருக்குள் தெரிந்துகொள்ளப்பட்ட ரூபையும், எனக்கும் தாயாகிய அவனுடைய தாயையும் வாழ்த்துங்கள்’ (ரோமர் 16:13). ஆக, முழு குடும்பமும் முதல் நூற்றாண்டு தேவாலயத்தின் குடும்பத்தின் ஒரு பகுதியாக இருந்தது.


அந்தியோகியா சபையில் மூன்று கண்டங்களைச் சேர்ந்த தலைவர்கள் இருந்தனர். ‘அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவும், நீகர் என்னப்பட்ட சிமியோனும் (சீமோன் தான், பெயர் உச்சரிப்பினால் சிமியோன் என மாறியுள்ளது), சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும், தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள்’ (அப்போஸ்தலர் 13:1). சில வேதாகம அறிஞர்கள் இங்குள்ள சிமியோன் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்காக சிலுவையைச் சுமந்த அதே சீமோன் என்று கூறுகின்றனர். அந்தியோகியாவின் ஆற்றல்மிக்க தலைவர்களில் ஒருவராக சீமோன் மற்ற சபைத் தலைவர்களுடன் ஈடுபட்டார், உபவாசம் மற்றும் ஜெபம் மற்றும் மிஷனரிகளான பர்னபா மற்றும் சவுல் (பவுல்) ஆகியோரை ரோமானியப் பேரரசின் பல்வேறு பகுதிகளுக்கு நியமித்தார்.

சீமோன் கல்வாரி பாதையில் ஆண்டவரைப் பின்தொடர்ந்து, மகிமையின் பாதையில் தனது பயணத்தைத் தொடர்ந்தார். சீமோனைப் போல எல்லாரும் சிலுவையைச் சுமக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சீஷராவதற்கு அதுவே முதல் தேவை. எப்படியோ, இன்றைய பிரசங்கங்களில் சீமோனைப் பற்றி பேசுவது அரிது, விடுப்பட்ட பாத்திரம். சீமோன் வாய்ப்பை பெற்றார், அப்படியென்றால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அவமானம், துன்பம் மற்றும் நிராகரிப்பை உடனிருந்து அடையாளமாக கண்டார். உலகில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் துன்பத்தையும் வேதனையையும் எதிர்பார்க்க வேண்டும். சீமோன் குடும்பத்தின் ஆவிக்குரியத் தலைவராகவும், விருந்தோம்பும் மனைவி மற்றும் சபைகளில் முக்கிய மகன்களுடன் இருந்தார். உள்ளூர் சபையில், சீமோன் தேவ ராஜ்யத்தை கட்டியெழுப்புவதில் ஈடுபட்ட ஒரு தலைவராக இருந்தார்.

துணிச்சல் மற்றும் முன்மாதிரி நிறைந்த சீமோனை நாம் பின்பற்றுவதற்கு தகுதியானவர்தான்.

# தேனி!

தேனியின் படத்தைப் பார்த்து நீங்களே வரைந்து பழகுங்கள் குழந்தைகளே.



# தவக்காலம் வாய்ப்புகளின் காலம்

பரபாஸா பரமனா எனும் தெரிவுக்கு
பரபாஸ் என கூக்குரலிட்டது
ஒரு கூட்டம்!

பதவியா? நீதியா?
எனும் வாய்ப்புக்கு
கைகழுவி அழுக்கானான் பிலாத்து!

என் விருப்பமா? தந்தையின் விருப்பமா?
எனும் கேள்விக்கு
தந்தையின் சித்தமென்றார் இயேசு!

ஆசீர்வதிப்பதா? சபிப்பதா?
பாலாமின் இழிசிந்தனைக்கு
வாய்பேசி கழுதை விடை தந்தது.

அழைப்பை ஏற்பதா? தூரமாய் செல்வதா?
எனும் யோனாவின் முடிவுக்கு
விழுங்கிய பெருமீன் விடை சொன்னது.

பசியினில் மடிவதா?
பரமனில் இணைவதா?
எனும் எலியாவின் சூழலுக்கு
பசியாற்றிய காகம் ஸ்விக்கியானது.

விசுவாசத்தில் நிலைப்பதா?
சுவாசத்தை முடிப்பதா?
எனும் தானியேலின் தருணத்துக்கு
வாயடைத்த சிங்கங்கள் விடை தந்தன.



மறுதலித்து மரிப்பதா?
பின்தொடர்ந்து மரிப்பதா?
எனும் நெருக்கடி கேள்விக்கு
கொக்கரித்த சேவல் விடைதந்தது.



அகலமான வாசலா?
இடுக்கமான வாசலா?
இருளின் சூட்சியா
ஒளியின் ஆட்சியா?

சாவின் சன்னலா
வாழ்வின் வாசலா?
பாவத்தின் வசீகரமா
புனிதத்தின் நிரந்தரமா?
காலம் நம் முன்னால்
பூவா தலையா
போட்டு விளையாடுகின்றது.

சிலுவை சுமக்கும் வாய்ப்பொன்று
சீமோனுக்கு வலுக்கட்டாயமாய்
வழங்கப்பட்டது.

வழியோரத்தில் நின்று
வரலாற்றின் விழுதொன்றை
வழுவ விடாமல்
பிடித்துக் கொண்டான்.



சிலுவை உச்சியில்
கள்வனுக்கு
முதல் வாய்ப்பொன்று
கடைசி வாய்ப்பாய்
வழங்கப்பட்டது.

நழுவ விட்ட வாய்ப்புகளை
எண்ணி
உடைந்து போகாமல்,
கிடைத்த வாய்ப்பை
நழுவ விடாமல் அடையும் காலம்.

ஆம், தவக்காலம்
வாய்ப்புகளின் காலம்.

# கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்

இளைஞர்களின் மனவலிமையைச் சோதிப்பதற்காக பத்து இளைஞர்களை ஒரு அறையில் அமரவைத்தார்கள். அந்த அறையில் இருந்த கரும்பலகையில் மூன்று கோடுகள் நீளமாக ஒன்றும், சிறிதாக இன்னொன்றும், அதைவிட மிகவும் சிறிதாக மூன்றாவதும் வரையப்பட்டிருந்தன.

அந்த அறையிலிருந்த பத்து இளைஞர்களில் ஒன்பது பேருக்கு ரகசியமாய் ஒரு செய்தி சொல்லப்பட்டிருந்தது. வரையப்பட்டிருக்கும் கோடுகளில் பெரிய கோடு எது என்று கேட்கும்போது இரண்டாவது பெரிய கோட்டைக் காட்ட வேண்டும் என்பதே அது! ஆனால் இந்த செய்தி பத்தாவது நபருக்கோ தெரியப்படுத்தப்படவில்லை.

பத்து நிமிடம் பயிற்சியாளர் அவர்கள் முன் வந்து நின்றார். இந்த கரும்பலகையில் வரையப்பட்டிருக்கும் கோடுகளில் பெரிய கோடு எது என்று ஒவ்வொருவரையும் பார்த்து கேட்டார். அறையிலிருந்த அனைவருமே இரண்டாவது பெரிய கோட்டைச் சுட்டிக்காட்டி அது தான் பெரிய கோடு என்றார்கள். பத்தாவது நபருக்கோ ஆச்சரியம்! இதெப்படி... முதல் கோடுதானே பெரியது, ஏன் இரண்டாவது கோட்டைக் காட்டுகிறார்கள் அல்லது என் பார்வையில் ஏதேனும் திடீர் பழுதா என குழம்பிக் கொண்டிருந்தவரை பத்தாவது நபரைப்



பார்த்து பயிற்சியாளர் மீண்டும் கேட்டார். எது பெரிய கோடு? முதலாவதா, இரண்டாவதா அல்லது மூன்றாவது கோடா? அந்த இளைஞர் சில வினாடிகள் மௌனமாய் நின்று நிதானமாக இரண்டாவது கோடுதான் பெரியது! என்று சொன்னான்.

இன்றைய இளைஞர்களுக்கு உண்மையை உரக்கச் சொல்லும் தைரியம் பலவேளைகளில் வருவதில்லை. கூடியிருப்பவர்கள் தவறுசெய்தால் அல்லது தமக்கு கற்பிக்கப்பட்ட தவறோடு ஒன்றிப் போய்விடும் பழக்கம் உடையவர்களாகத் தான் அவர்கள் பலவேளைகளில் இருக்கிறார்கள்.

தம்முடைய செயல்களை நிர்ணயம் செய்ய அடுத்தவர்களின் செயல்களை ஒப்பீடு செய்கிறார்கள். சுற்றியிருப்பவர்கள் எல்லோரும் ஏதேனும் ஒரு பைனான்சியரிடம் பணம் போட்டிருந்தால் இவர்களும் போடுகிறார்கள். எல்லோரும் சேர்ந்து தோற்றுப் போவது தனியாய் தோற்றுப் போவதை விட நல்லது என்று கருதுகிறார்கள்.

இந்த தயக்கமும், உண்மையை உண்மை என்று தானே ஒத்துக் கொள்ள மறுக்கின்ற மன பலகீனமும் சமுதாயத்தின் சரிவுகள். இவை சமுதாயத்தைச் சரிசெய்யும் இளைஞனின் பணியை வெகுவாகப் பாதிக்கின்றன.

தேவன் நம்மை அவருடைய சாயலாகப் படைத்தார். தேவன் வார்த்தை வடிவமானவர். எல்லாரிலும் தேவன் இருக்கிறார் என்பதை பறைசாற்றவே ஆணும் பெண்ணுமாக இரண்டு மனிதர்களைப் படைத்த தேவன் அவர்களைத் தன் சாயல் என்கிறார். தேவன் சாயல்களுக்கு அப்பாற்பட்டவர் அவருக்கு அனைவரின் சாயலும் இருக்கிறது என்பதை இறை வார்த்தை நமக்கு விளக்குகிறது. எனில், தேவனின் சாயலாக இருக்கும் நாம் ஏன் தயங்குகிறோம்?

உண்மையை உண்மை என்று சொல்லும் தைரியம் ஒருவகை என்றால், தவறிழைத்தால் நான் தவறுசெய்தேன் என்று ஒத்துக்கொள்ளுதல் அதைவிட உயர்வான நிலை. பிறருடைய விமர்சன அம்புகளோ, ஏளன வார்த்தைகளோ நம்மை சவக்குழிக்கு அனுப்புவதில்லை என்னும் உள்ள உறுதி உடையவர்களே நிமிர்ந்து நிற்கிறார்கள்.

நாம் எப்படி நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறோம்? நம்மைச் சுற்றி இருப்பவர்கள் செய்வதை நாமும் செய்கிறோமா? இல்லை எது சிறந்ததோ, எது சரியானதோ அதைச் செய்கிறோமா? சுற்றியிருப்பவர்கள் தவறான திசையை நோக்கிச் செல்கிறார்கள் எனில் சரியான திசை தெரிந்திருந்தாலும் நாம் தவறான திசைக்குச் செல்லத் துணிவோமா?

இயேசு துணிச்சலாய் இருந்தார். சதிகாரர்களில் சபையில் துணிச்சலுடன் சத்தமிட்டார். ஆலயத்தில் கடைகளை விரித்திருந்தவர்களிடம் ‘இது என் தந்தையின் இல்லம். ஜெபத்துக்கான தளம், கடைவிரிக்கும் இடமல்ல’ என்று கர்ஜித்தார். தன் உயிரைப் பறிக்கும் அதிகாரம் படைத்த அரசனிடமும், நான் தேவக்குமாரன் என்று துணிந்து சொன்னார். சிலுவைச் சாவு குறித்த அச்சத்தில் நான் தச்சன் மகன் தான், தேவகுமாரன் அல்ல என்று கதறவில்லை.

உண்மைக்குச் சான்று பகரும் துணிச்சல். இதைத் தான் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். ‘உண்மைக்குச் சான்று பகர்தலே எனது பணி’ என்ற இறைவாக்குக்கு ஏற்ப துணிந்து நிற்க முயல்வோம். கூடியிருப்பவர்கள் விஷம் குடிக்கிறார்கள் என்பதற்காக நாமும் குடிக்க வேண்டியதில்லை. எது நல்லது எது அல்லது என்பதைப் பகுத்தறியும் வலிமை நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும் (மத்தேயு 5:37).


உங்கள்
முந்தின சீரைப்பார்க்கிலும்
உங்களுக்கு
நற்சீர் உண்டாகச்செய்வேன்;
அதினால் நான் கர்த்தர் என்று
அறிந்துகொள்வீர்கள்.
எசேக்கியேல் 36:11
God bless you


கர்த்தர்:
"உன்னை நித்திய
மாட்சிமையாகவும், தலைமுறை
தலைமுறையாயிருக்கும்
மகிழ்ச்சியாகவும் வைப்பேன்."
ஏசாயா 60:15
God bless you


சங்கீதம் 18:35
God bless you
கர்த்தாவே,
உம்முடைய வலதுகரம்
என்னைத் தாங்குகிறது,
உம்முடைய காருணியம்
என்னைப் பெரியவனாக்கும்.


யோபு 8:21 - God bless you
இனி கர்த்தர் உம்முடைய
வாயை நகைப்பிலும், உம்முடைய
உதடுகளைக் கெம்பீரத்தினாலும்
நிரப்புவார்.

சீடத்துவ பாடம்

# உஷ்...



மூன்று முக்கியமான விஷயங்களை படு ரகசியமாய் செய்யுங்கள் என கிறிஸ்தவம் போதிக்கிறது. ரகசியமாய் செய்யும் இந்த செயல்களே நமது விசுவாசத்தின் ஆழத்தை நிறுத்துப் பார்க்கும் அளவைகளாகவும் இருக்கின்றன என்கிறது கிறிஸ்தவம்.

அப்படியென்ன மூன்று விஷயங்கள்.

1. ஜெபம் : ஜெபிக்கும்போது ரகசியமாய் ஜெபியுங்கள் என்கிறார் இயேசு. காரணம் அன்றைய சமூகத்தில் ஆன்மீகவாதிகள் என சொல்லிக் கொண்டவர்கள் தெரு முனைகளில் நின்று கத்தி கூச்சலிடுவதையே வழக்கமாய் கொண்டிருந்தார்கள். அதுவே இறைவன் விரும்புவது என தங்களுக்குள்ளேயே நினைத்துக் கொண்டார்கள்.

அவர்களுடைய எதிர்பார்ப்பு, தான் மிகப்பெரிய ஆவிக்குரியவன் என மக்கள் கருத வேண்டும் என்பதும் அதற்குரிய மரியாதையையும், வணக்கத்தையும் மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே.

இயேசு சொன்னார், ஜெபிக்கும்போது கதவைத் தாழிட்டு விண்ணகத் தந்தையிடம் ஜெபம் செய். மறைவாய் இருக்கும் ஜெபமே தேவனுக்கு நிறைவாய் இருக்கும் ஜெபம். எனவே மனதைத் திற, கதவைப் பூட்டு. இதுவே ஜெபிக்கும் வழி என்றார் இயேசு.

நமக்குத் தேவை மனிதரின் மரியாதையா, இறைவனின் இணையற்ற கருணையா? மனிதனின் அங்கீகாரமெனில் வித விதமான அங்கிகளுடன் வீதிகளில் கூச்சலிடலாம். தேவனிடமிருந்து இரக்கத்தைப் பெற வேண்டுமெனில் அடைபட்ட அறைகளில் இதயத்தைத் திறக்கலாம்.

2. உபவாசம் : உபவாசம் இருக்கும் போது யாருக்கும் தெரியாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்றார் இயேசு.

நான் உபவாசம் இருக்கிறேன் என பறைசாற்றி மனிதனின் பாராட்டு மற்றும் மரியாதையைப் பெற்றீர்களெனில் உங்களுக்கு தேவனிடம் எந்த பலனும் இல்லை. உங்கள் உபவாசமும் வீண் என்பதே இயேசுவின் தெளிவான போதனை.

இயேசு உபவாசத்தைக் குறித்து ஒரே ஒரு கட்டளை மட்டுமே கொடுத்திருக்கிறார். அதாவது ''உபவாசம் இருக்கும் போது பிறருக்குத் தெரியப்படுத்தாதே''.

நாளைக்கு ஃபாஸ்டிங் பிரேயர் என தம்பட்டம் அடிக்கிறோமா? வெள்ளிக்கிழமை நான் சாப்பிடறதில்லை என பறை சாற்றித் திரிகிறோமா? நாம் எப்படி இருக்கிறோம்?

மனுஷ குமாரன் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னரே தம்முடைய சீடர்கள் உபவாசம் இருப்பார்கள் என சொன்ன இயேசு நாம் உபவாசம் இருக்க வேண்டும் என்பதைப் பேசுகிறார். எனவே உபவாசம் கடைபிடிப்பது அவசியமானதே. உபவாசிப்பதால் உடல் நமக்குக் கட்டுப்பட்டிருக்கிறதா உடலுக்கு நாம் கட்டுப்பட்டிருக்கிறோமா என்பதைக் கண்டறியும் வழியும் கூட. ஆனால் அதை நமக்கும் தேவனுக்குமான ஒரு உடன்படிக்கையாய் வைத்துக் கொள்வோம்.

அடுத்த முறை உபவாசிக்கும் போது நோயில் இருப்பது போல முகத்தைக் காட்டிக் கொள்ளாதிருப்போம். உண்ணா நிலை தேவ இராஜ்யத்தின் கதவைத் திறக்கட்டும், மனிதனின் பாராட்டுச் சன்னலை திறக்க வேண்டாம்.



3. உதவி : பிறருக்கு உதவி செய்யும் போது யாருக்கும் சொல்ல வேண்டாம் என்பது இயேசுவின் கட்டளை. ‘‘வலது கை செய்வதை இடது கை அறிய வேண்டாம்’’ என்கிறார் அவர்.

ஒருவருக்கு ஒரு தேவையெனில் யாருக்கும் தெரியாமல் சென்று அவருக்கு உதவவேண்டும். அப்போது தான் தேவ இரக்கம் நமக்குக் கிடைக்கும். மனிதனிடம் விளம்பரம் செய்து விட்டு உதவிகளை வழங்கினால் பரலோக ஆசீர்வாதங்கள் இல்லை என்பதை இயேசு தெளிவாகவே சொல்லியிருக்கிறார். மனிதனின் கை தட்டலா, விண்ணக நிலை எட்டலா? எது தேவை என்பதை தீர்மானிக்க வேண்டியது நாமே!

இந்த மூன்றுமே இரகசியமாய் செய்ய வேண்டுமென இயேசு சொன்னவை.
இன்றைய கிறிஸ்தவம் இந்த மூன்றையும் செய்கிறதா என்பது முதல் கேள்வி.
செய்ய வேண்டிய விதத்தில் செய்கிறதா என்பது இரண்டாவது கேள்வி.
நம்மை நாமே படிப்போம். இயேசுவின் உரைப்படி நடப்போம்.



# நிரப்புங்கப்பா...
## நிரப்புங்கப்பா...



.......................................... தேன்கூடுபோல் ஆத்துமாவுக்கு மதுரமும், .......................................... ஔஷதமுமாகும்.

தேவனுடைய வார்த்தைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் .......................................... தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் .................................. இருக்கிறது.

திருப்தியடைந்தவன் தேன்கூட்டையும் .................................... பசியுள்ளவனுக்கோ கசப்பான பதார்த்தங்களும் ..........................................

உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு ................................................. என் வாய்க்கு அவைகள் .......................................... மதுரமாயிருக்கும்.

உச்சிதமான ........................................................ அவர்களைப் போஷிப்பார்; ................................................... உன்னைத் திருப்தியாக்குவேன்.

என் மகனே, ...................................................... அது நல்லது; கூட்டிலிருந்து ஒழுகும் தேன் உன் வாய்க்கு ...............................................

பரஸ்திரீயின் ...................................................... தேன்கூடுபோல் ஒழுகும்; அவள் ............................................. எண்ணெயிலும் மிருதுவாயிருக்கும்.

விடைகளுக்கான வசன இருப்பிடங்கள்



நீதிமொழிகள் 16:24, 1 சாமுவேல் 14:26, நீதிமொழிகள் 27:7, சங்கீதம் 119:103, சங்கீதம் 81:16, நீதிமொழிகள் 24:13, 1 சாமுவேல் 14:25, சங்கீதம் 19:10, 1 சாமுவேல் 14:27, நீதிமொழிகள் 5:3, உன்னதப்பாட்டு 4:11

# வங்கிக் கணக்கின் (Bank Account) விபரம்:

ஏலிம் ஊழியங்கள் மற்றும் அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்களை பொருளாதார உதவிகளால் தாங்க விரும்பினாலோ, காசோலை (Cheque) / கேட்பு வரைவோலை (Demand Draft) மூலம் அனுப்புவதாக இருந்தாலோ, கீழ்க்காணும் ஏதேனுமொரு பெயரில் எடுத்து எமது அலுவலக முகவரிக்கு பதிவு அஞ்சல் (Registered Post) அல்லது தூதஞ்சல் (Courier) மூலமாக அனுப்பலாம்.

1. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49 510100003062

2. ACCOUNT NAME : **ANTANTULLA APPAM TRUST**
   ACCOUNT NO. : 49510200000122
   BANK NAME : **BANK OF BARODA**
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   SWIFT CODE : BARBINBB
   BRANCH & CODE : UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951
   CHENNAI – 600 024.

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

**ELIM - GOOGLE PAY : 98848 77607**

**Address : J. JOSEPH OSBORNE JEBADURAI**
**50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600 024. Tamil Nadu**

1. ACCOUNT NAME : **ELIM GLORIOUS REVIVAL CHURCH**
   ACCOUNT NO. : 49510100000230

2. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49510100003063
   BANK NAME : BANK OF BARODA
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   BRANCH : KODAMBAKKAM
   CHENNAI - 600024

பூமியின்மேல் அக்கினியைப் போட வந்தேன், அது இப்பொழுதே பற்றி எரியவேண்டுமென்று விரும்புகிறேன். லூக்கா 12:49

அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்கள் நடத்தும்



# 43வது திருப்பத்தூர் விடுதலை அக்கினி அபிஷேக முகாம் 2025



பாஸ்டர். ஆஸ்பார்ன் ஜெபத்துரை



சகோ. C. எபிநேசர் பால்



சகோ. G.P.S. ராபின்சன்



பாஸ்டர். லூகாஸ் சேகர்



சகோதரி எலிசபெத் ராஜ்குமார்

- அபிஷேகம் நிறைந்த ஆராதனை
- வல்லமையான ஜெபம்
- சத்திய வார்த்தை

**மே 15, 16, 17**

நேரம்

**வியாழன், வெள்ளி 6 AM - 9 PM**

**சனிக்கிழமை 6 AM - 1 PM**

பதிவு கட்டணம் ₹200

SCAN HERE

இடம்

**அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்**

கிறிஸ்துகுல ஆசிரமம், திருப்பத்தூர் மாவட்டம் வேலூர் அருகில்

தொடர்புக்கு: 044 24840407, 9003067777

மூன்று வேளையும் உணவு வழங்கப்படும்

தங்குமிடம் முன்பதிவிற்கு

**9884916777 | 9003067777**




If undelivered please return to:

## Elim Glorious Revival Church

#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India
for 24X7 Prayer: 91-9444322200, 9444322211
Email: enquiry@elimgrc.com, Website: www.elimgrc.com